**தேனி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(24-02-2015 – 28-02-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 23-02-2016

**கடந்த கால வானிலை 19-02-2016 முதல் 22-02-2016 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 34-35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24 |
| மேக மூட்டம் | 3-5 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 41-70 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 7-15 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 28-02-2016 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 24.02.16 | 25.02.16 | 26.02.16 | 27.02.16 | 28.02.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 1 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 28 | 28 | 28 | 26 | 26 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ | 21 | 21 | 21 | 20 | 20 |
| மேக மூட்டம் | 2 | 2 | 2 | 4 | 4 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 82 | 82 | 82 | 85 | 85 |
| குறைந்த பட்ச ஈரப்பதம்(சதவீதம்) | 35 | 35 | 35 | 42 | 42 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 9 | 9 | 9 | 9 | 9 |
| காற்றின் திசை | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு |

**குறுஞ்செய்தி**

வரும் ஐந்து நாட்களுக்கு வானம் ஒரளவு மேக மூட்டத்துடனும், மென் காற்றுடனும் வறண்ட வானிலையே நிலவும்: 28-பிப்ரவரி மட்டும் இலேசான மழை சில இடங்களில் பெய்யக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள**

**முக்கிய பயிர்கள்: நெல், பருத்தி, கரும்பு மற்றும் காய்கறிகள்**

**பருவம்: நெல்- முதிர்ச்சி மற்றும் அறுவடை பருவம், பருத்தி-காய்க்கும் பருவம்**

- வரும் ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கலாம்.
- பருத்தியில் பூ உதிர்தலை தடுக்க 40 பி.பி.எம் என்.ஏ.ஏ. கலவையை (அதாவது லிட்டருக்கு 40 மி.கிராம் நாப்தலீன் அசிடிக் அசிட் என்ற அளவில்) விதைத்த 60 மற்றும் 90-வது நாட்களில் தெளிக்கலாம்.
- பருத்தியில் இலை பழுப்பு நோயைக் கட்டுப்படுத்த ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட்+ டெட்ராசைக்ளின் கலவை 100g+ காப்பர் ஆக்ஸிகுளோரைடு 1250g/ha தண்ணிரில் கலந்து தெளிக்கவும். மேலும் இரண்டு அல்லது மூன்று முறை 10 நாள் இடைவெளியில் தெளிக்கலாம்.
- கரும்பு இரும்புச்சத்து பற்றாக்குறை நிவர்த்தி செய்ய 250 கிராம் பெர்ரஸ் சல்பேட் 100 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம் அல்லது எக்கருக்கு 25 கிராம் பெர்ரஸ் சல்பேட் மண்வழி இடலாம்.